[7th November 1966

(இ) ஆம் என்றால், விபரம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிகளில் ஏற்பட்டுள்ள தற்காலிக காலியிடங்களுக்குரிய தேர்தலைப் பின்னர் குறிக்கப்படும் தேதிக்குத் தள்ளிப்போடுமாறு தேசிய நெருக்கடி காரணமாக அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. தமிழ் நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 8-வது பிரிவைச் சேர்ந்த 4-எ உட்பிரிவின் கீழ் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு இவ்வாறு ஆணையிடப்பட்டுள்ளது.

நகரசபைகள்

* 499 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரசபையில் 1965 நவம்பரிலிருந்து பண நெருக்கடி ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆம் என்றால் காரணம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வரி விதத்தை மாற்றியமைப்பது குறித்து ரிவிஷன் மனுக்கள் ஏராளமாக வந்ததாலும், அந்த மனுக்களின்மீது முடிவெடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டதாலும், முக்கிய வருவாய் ஆதாரமாகிய சொத்து வரி குறித்த வரித் தொகை அறிக்கைகள் அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டதாலும் அந்த நகரசபையில் பண நெருக்கடி ஏற்பட்டது.

திரு. கரு. சீமைச்சாமி: ஸார், மதுரை நகர சபை பண நெருக்கடி காரணமாக ஸ்தம்பித்து விட்டது. அங்குள்ள தொழிலாளர்களுக்குச் சம்பளம் போடவில்லை. இதற்குக் காரணம் பட்ஜெட் எஸ்டிமேட்டில் ப்ரொவிஷன் இல்லாமலேயே 10 லட்சம் ரூபாய்க்கு லாரிகள் வாங்கப்பட்டும், 12 லட்சம் ரூபாய்க்கு பைப்புகள் போடப்பட்டும் இருக்கிறது. இதுதான் காரணம் என்று சொல்லப்படுகிறது. பட்ஜெட்டில் ப்ரொவிஷன் இல்லாமல் எப்படி நிறைவேற்றினார்கள்? அரசாங்கம் இதற்கு அனுமதி கொடுத்ததா? ஸ்தம்பித்ததற்கு இதுதான் காரணமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: முக்கிய கேள்விக்கு என்ன பதில் அளித்தேனோ அதுதான் காரணம்; கனம் அங்கத்தினர் சொல்லுவது போல் இல்லை. பப்ளிக் ஹெல்த், எஜுகேஷன் ஸைடில் ஸ்டாஃபை அதிகமாக நியமித்ததால் அதன் மூலம் பணம் அதிகமாகச் செலவு ஆகியது. க்ஜின்க்வெனியல் ரிவிஷனில், முக்கிய கேள்விக்கு பதில் அளித்தது போல், ஏற்பட்ட தாமதத்தைத் தவிர வேறு காரணம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அமைச்சர் கூறிய பதிலிலிருந்து அந்த மதுரை நகராட்சி மன்றம் தன் நிர்வாகத் திறமைக் குறைவினாலும், சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தவறியதனாலும் நெருக்கடி ஏற்பட்டு ஸ்தம்பித்து விட்டது என்று தெரிகிறது. திருநெல்வேலி போன்ற நகராட்சிகளுக்கு நோட்டீஸ் கொடுத்த மாதிரி இப்படிப்பட்ட நகராட்சிக்கு நோட்டீஸ் கொடுக்கத் தவறியதற்கு அரசியல் காரணமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது நிர்வாகம் சம்பந்தமான விஷயம். சர்க்கார் அதிகாரிகளை உடனடியாக அனுப்பி, செக்ரட்டரி, முனிசிபல் ஸ்பெஷல் ஆபீஸர்களை (Revenue) அனுப்பி நிலைமையைச் சீர்படுத்துவதில் வெற்றி அடைந்து, 31-3-1966-ல் 40 லட்சம் ரூபாய் இருக்கும் நிலையில் நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறது. மேலும் சர்க்கார் ஆலோசனை கூறியதன் பேரில் கவுன்சிலும் 'ஷோ' டாக்ஸ், தமாஷா வரி போன்றவைகளுக்கு "சர்சார்ஜ்" விதிக்க தீர்மானம் செய்து அவர்களே 10 லட்சம் ரூபாய் வரும் அளவில் செய்தார்கள். அவர்களை துரிதப்படுத்தி அதிகமாக வருவாய்த் துறையைப் பெருக்குவதற்கு வேண்டிய ஆலோசனைகள் சொன்னதன் பேரிலும் வருவாய் அதிகரித்து நல்ல நிதி நிலைமை இன்று இருக்கிறது.

* 500 Q.—Sri V. STNKARAN. Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to extend the terms of office of Chairmen and members of Municipal Councils in the State from 3 years to 5 years?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்த விஷயம் இன்னும் பரிசிலனையில் உள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி: ஸார், பரிசிலனையில் உள்ளது என்று சொன்னால் ஏதாவது விஷயம் நடக்குமா? அல்லது மூன்று வருஷங்கள், மூன்று வருஷங்கள் தானா?

கனம் சபாநாயகர்: இதற்குப் பதில் கொடுக்க முடியும் என்றால் பரிசிலனையில் இருக்கிறது என்று ஏன் சொல்லப் போகிறார்கள்?

திரு. கரு. சீமைச்சாமி: பரிசீலனை என்பது சர்வ சாதாரணமாகப் போய் விட்டது. ஆகையால்தான் . . . .

கனம் சபாநாயகர்: எப்போது முடிவு தெரியும் என்று கேளுங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி: எப்போது நடக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: எப்போது நடக்கும் என்றால் என்ன அர்த்தம்? எப்போது முடிவு தெரியும் என்று கேளுங்கள்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் அங்கத்தினர் கேட்டதால் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். நகர மன்றங்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் அவைகளுக்கும் இணைப்பு இல்லை. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவைகளுக்கு இணைப்பு இல்லை. மத்திய சர்க்காரி